பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 30 திங்கட்கிழமை 15.01.2024 அதிர்வு 168

## பேருவளை கடற்கரையில் இளைஞரின் சடலம் மீட்பு!

பேருவளை கடற்கரையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

20 வயதுடைய இளைஞரின் சடலமே இன்று மீட்கப்பட்டுள்ளது என்று பயாகல பொலிஸார் தெரிவித்துள்ளார்.

04

# பொது வேட்பாளராக களமிறங்கும் ரணில்

## சித்திரைப் புத்தாண்டுக்கு முன் அறிவிப்பு வெளியாகும் என்கின்றது ஐ.தே.க.





"சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொது வேட்பாளராக அறிவிப்போம். ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவார்கள்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஹறிசன் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"பொருளாதார நெருக்கடியின்போது அஅரசைப் பொறுப்பேற்காமல் தப்பிச் சென்றவர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார் என்று குறிப்பிட்டுக் கொள்கின்றார்கள். இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே உள்ளது.

04

# பொங்கல் நாளிலும் அத்துமீறிய இந்திய மீனவர்கள் 10 பேர் கைது






(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 10 பேர் இன்று காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டம், பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 10 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய ட்ரோலர் படகும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கைதான 10 மீனவர்களும் மயிலிட்டியில் வைத்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

# சஜித் ஜனாதிபதியான கையோடு நாடாளுமன்றம் கலைக்கப்படுமாம்

## – ரஞ்சித் மத்தும பண்டார கூறுகின்றார்



“ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு அதில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற கையோடு நாடாளுமன்றம் கலைக்கப்படும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அரசமைப்பின் பிரகாரம் நவம்பர் மாதத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். செப்டெம்பரில் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி இப்போது கூறவேண்டியதில்லை. அவர் கூறாவிட்டாலும் அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

அந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவார். நவம்பர் மாதம் அவர் பதவிப்பிரமாணம் செய்வார். அதன்பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, 2025 ஜனவரி, பெப்ரவரியில் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.” – என்றார்.



# காலி சிறைச்சாலையின் செயற்பாடுகள் வழமைக்கு




மூளைக் காய்ச்சல் காரணமாக கைதி ஒருவர் உயிரிழந்ததையடுத்து தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த காலி சிறைச்சாலையின் செயற்பாடுகள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளன.

காய்ச்சல் அறிகுறிகளைக் கொண்டிருந்த அனைத்து கைதிகளும் தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சையின் பின்னர் தற்போது மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் மூளைக் காய்ச்சல் காரணமாக கடந்த 3ஆம் திகதி உயிரிழந்ததையடுத்து கடந்த 7ஆம் திகதி முதல் குறித்த சிறைச்சாலையின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

காய்ச்சல் அறிகுறிகளை வெளிப்படுத்திய மேலும் 8 கைதிகள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் இருவர் மாத்திரமே தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி சிறைச்சாலையின் நிலைமை காரணமாக, நீதிமன்ற நடவடிக்கைகள் நிகழ்நிலை தொழில்நுட்பத்தின் மூலம் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் பார்வையாளர்களின் வருகையும் மட்டுப்படுத்தப்பட்டது.

அத்துடன், புதிதாக வரும் கைதிகள் அனைவரும் அகுனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் தற்போது நிலைமை சீரடைந்துள்ளமையால் கைதிகளை மீண்டும் காலி சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்வதற்கு அனுமதித்துள்ளதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# தொடரும் கைது வேட்டை மேலும் 952 பேர் சிக்கினர்



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 952 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 11 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப் பொருட்களுக்கு அடிமையான 10 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் விசேட பணியகத்தால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 29 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சுமார் 3 கிலோ ஐஸ் ரக போதைப்பொருள் மற்றும் 4,310 போதை மாத்திரைகள் உள்ளிட்ட பல போதைப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வந்தது!



உலகின் பிரமாண்ட கப்பல்களில் ஒன்றான ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் இன்று அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மார்ஷல் தீவுகள் கொடியுடனான இந்தக் கப்பலில் அமெரிக்க, கனேடிய மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று வருகை தந்துள்ளது.

மாலைத்தீவில் இருந்து 1,090 பயணிகள் மற்றும் 790 பணியாளர்களுடன் இந்தக் கப்பல் வருகை தந்துள்ளது.

இந்தக் குழுவினர் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் நாளைய தினம், ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் அதன்பின்னர் தாய்லாந்தின் புக்கெட் துறைமுகத்துக்கும் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



### இலங்கைக்குக் கடத்த முற்பட்ட

# 57 ஆயிரம் போதை மாத்திரைகள் தமிழகப் பொலிஸாரிடம் சிக்கின

**(ந.லோகதயாளன்)**

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 57 ஆயிரம் போதை மாத்திரைகள் தமிழகப் பொலிஸாரால் இன்று காலை கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்குக் கடத்தும் நோக்கில் தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்ட கடற்கரைக்கு எடுத்து வரப்பட்ட போதை மாத்திரைகளே சிக்கியுள்ளன.



பொதி செய்யப்பட்ட போதை மாத்திரைகள் ஒரு வாகனத்தில் எடுத்து வரப்படுகின்றன என்று தூத்துக்குடி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சோதனையின்போதே இந்த 57 ஆயிரம் போதை மாத்திரைகளும் வாகனத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.



# அவலோகிதேஸ்வர சி.ஐ.டியால் கைது!

பௌத்த மதத்தைத் திரித்து பிரசங்கம் செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள மஹிந்த கொடிதுவக்கு என்ற அவலோகிதேஸ்வர குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பன்னிப்பிட்டிய பகுதியில் வைத்து மேற்படி நபர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு ஏற்கனவே வெளிநாட்டுப் பயணத் தடை விதித்து கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டிருந்தார்.

# 11 வழக்குகளுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் மாட்டினார்

நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள 11 வழக்குகளுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவரால் திருடப்பட்ட பொருட்கள் மற்றும் பணம் மீட்கப்பட்டன என்று நீர்கொழும்பு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சீதுவ ராஜபக்சபுர பகுதியைச் சேர்ந்த 28 வயதானவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் நடத்திய விசாரணையில், திருடப்பட்ட 2 கைக்கடிகாரங்கள், ஒரு தங்க வளையல், தொலைக்காட்சிப் பெட்டி, 2 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஒரு தங்கத் துண்டு ஆகியவற்றை மீட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பொது வேட்பாளராக...**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அரசைப் பொறுப்பேற்பதில் ஆசை ஆனால் பயம். இவரது தயக்கத்துக்காக நாட்டை நெருக்கடிக்குள்ளாக்க முடியாது என்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைத் தோற்றுவித்தார்.

பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. ஆகவே பொருளாதார ரீதியில் ஸ்திரமடைய வேண்டுமாயின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டும். அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச நிர்வாகம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும்.


சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொது வேட்பாளராக அறிவிப்போம். ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவார்கள். ஜனாதிபதியின் பொருளாதார கொள்கைகளை ஐக்கிய மக்கள் சக்தியினர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அதனைப் பகிரங்கமாகக் குறிப்பிட மறுக்கின்றார்கள்." – என்றார்.

**பேருவளை கடற்கரையில்...**

இவர் கடலில் நீராடச் சென்று உயிரிழந்தாரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பியகம பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது பாட்டி வீட்டுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு நேற்று மதியம் வீட்டில் இருந்து திரும்பியவர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


அனைவருக்கும் இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துகள்
Ruhbins Hospital
RUHBINS HOSPITAL (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94773123456

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதி தேடுவதிலும் நீதி தேவை

உள்ளூர், உள்நாட்டு விடயங்களில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாத அரசு - நீதி செய்யாத அரசு - சர்வதேசக் கடற்பாதைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகக் கடற்படை கப்பல்களை செங்கடலுக்கு அனுப்புகின்றமையை எள்ளி நகையாடி விமர்சித்திருக்கின்றார் கொழும்பு பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்.

நியாயமான கேள்விதான். இலங்கை ஆட்சிப் பீடம் ஓரவஞ்சனையுடன் செயல்படுகின்றமையை விமர்சிக்கும் கிறிஸ்தவ மத பீடத்தின் இலங்கைத் தலைவர் தாம் கூட ஓரவஞ்சனையாகவே நடக்கின்றமைதான் இதில் வேடிக்கையிலும் வேடிக்கை.

பொரளை அனைத்துப் புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதன் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற விசேட ஆராதனையில் உரையாற்றிய போது மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார் பேராயர் மல்கம் ரஞ்சித்.

தேவாலயத்துக்குள் உண்மையாக கைக்குண்டுகளை வைத்தவர்களையோ, ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளையோ, கடந்த காலங்களில் ஊடகங்களுக்குத் தொல்லை கொடுத்தவர்களையோ, இவற்றில் சம்பந்தப்பட்ட உண்மைக் குற்றவாளிகளையோ அரசோ, அதிகாரிகளோ கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்தவில்லை என அவர் விசனத்துடன் கூறியிருக்கின்றார்.

"ஈஸ்டர் ஞயிறுக் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்களுக்கு எதிராக நீதித்துறை செயல்படுவதற்கு நாம் இன்னும் பார்த்துக் காத்திருக்கின்றோம். பத்திரிகையாளர்கள் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமைக்கும், 'த சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கும் யார் காரணம் என்பது இன்னும் தெரியவில்லை. அனைத்தும் கம்பளத்தின் கீழ் போட்டு மூடி மறைக்கப்பட்டு விட்டன. நாட்டில் பற்றியெரியும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக சர்வதேசக் கடல்களைப் பாதுகாப்பதற்கு அரசு முன்னுரிமை அளிப்பது வேடிக்கையான விடயம்" என்று கூறுகிறார் பேராயர்.

அவர் கூறுவது முற்றிலும் உண்மை. நியாயம். ஆனால் அவரின் அந்த கூற்றில் கூட நாம் இப் பந்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டியபடி, அவரின் பேரினவாத சிந்தனைப் போக்கு வெளிப் பட்டு நிற்பதுதான் நாட்டின் துரதிஷ்டமாகும்.

மதத் தலைவர்கள் தங்கள் மதத்துக்காகவும், அவற்றைப் பின்பற்றுவோரின் நலன் - பாதுகாப்பு போன்றவற்றிற்காகவும், குரல் எழுப்புவதும் போராடுவதும் நியாயமானவைதான். ஆயினும், அதையும் கடந்து இயற்கை நீதிக்காகவும், மனிதாபிமான நியாயத்துக்காகவும் குரல் கொடுப்பதும் அவர்கள் கடப்பாடே. அதையே அவர் போற்றுகின்ற இறைமகன் - சமாதான பிரபு - இயேசு பிரான் நமக்குப் போதித்துக் கொண்டிருக்கின்றார். அவர் உட்பட சகல மத போதகர்களுக்குமான முதல் போதனையும் அதுதான்.

இலங்கைத் தீவில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட போது, பாதிக்கப் பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்காகக் குரலே எழுப்பாது கண்மூடிப் பார்த்திருந்தமை மட்டுமல்லாமல், அட்டூழியம் புரிந்த படைகளுக்கு ஆசீர்வாதம் வழங்கி வடக்குக் கிழக்குக்கு அராஜகம் புரிய அனுப்பிக் கொண்டிருந்தவர் இந்தப் பேராயர்.

ராஜபக்ஷவின் இருண்ட யுக ஆட்சிக் காலத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் ஊடக ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பலர் காணாமலாக்கப்பட்டனர். தாக்கப்பட்டனர். பலர் சிறை வைக்கப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. அவை குறித்தெல்லாம் விவரிக்காமல் தவிர்த்துக் கொண்ட பேராயரின் கண்களில் ஆக சிங்கள ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்கவும் பிரகீத் எக்னெலிகொடவும் மாத்திரமே தெரிகின்றனர்.

நீதி நிலைநிறுத்துவதில் கூட பாரபட்சம் தேடும் இனவாத மதத் தலைவராகவே பேராயர் மல்கம் ரஞ்சித் தம்மைத் தொடர்ந்து வெளிப் படுத்தி வருகின்றார்.

நீதி தேடுவதிலும் ஒரு நீதி நியாயம் இருக்க வேண்டும். பாரபட்சமான நீதி தேடுபவர்கள் அதைத் தேடுவதற்கான தகுதியை அற்றவர்கள் தான்.

# சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்தார்; பெரிய தந்தை பொலிஸாரால் கைது!

## சுன்னாகம் மயிலங்காட்டில் சம்பவம்!!

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மயிலங்காடு பகுதியில் 14 வயது நிரம்பிய சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில், சிறுமியின் தந்தையின் அண்ணா (பெரியப்பா) கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது,

பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் சந்தேக நபர் குளிர்பானத்தில் மயக்க மருந்தைப் போட்டு சிறுமிக்குக் கொடுத்துள்ளார் என்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் சுன்னாகம் பொலிஸார் அவரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அந்த நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது. இருப்பினும் அது உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

சிறுமி பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் பெற்றோர் பிள்ளைகளை தனியாக விட்டோ அல்லது பாதுகாப்பற்ற நபர்களுடன் விட்டோ வெளியே செல்ல வேண்டாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளியே செல்லும் போது சிறுவர்களத பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புரொடவுஸ் தெரிவித்துள்ளார்.


வினோ
நகைப்பூங்கா
Vino Nakai Poonka
அனைவருக்கும்
இனிய தைத்திருநாள்
நல்வாழ்த்துகள்
வினோ நகைப் பூங்கா
VINO NAGAI POONGA
vnp
இல.177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
No.177, Kasthuriyar Road, Jaffna.
Tp-021 222 5394, 021 222 9494, 074 209 9494
இதுவரை காலமும் 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது புதிய முகவரியில் (வின்சர் தியேட்டர் முன்பாக) இயங்கிவருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
உரிமையாளர்: ச.புவிச்சந்திரன்
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. : 021 222 5394, 021 222 9494 , 074 209 9494

# நாட்டைவிட்டு வெளியேறும் தொழில் வல்லுநர்கள் பொருளாதாரத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு



தொழில்சார் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது புதிய விடயம் அல்ல. ஆனால் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறினால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாரதூரமான நிலைமை ஏற்படலாம்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடு தற்போது பொருளாதார ரீதியாக சாதகமான திசையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதைய நெருக்கடி தற்காலிகமானது, சரியான பாதையில் சென்றால் இதனை வென்றிட முடியும்.

பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் ஏற்படவில்லை. உலகின் மற்றைய நாடுகளைப் போலவே நாமும் சரிந்தோம். ஆனால் உலகின் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நாம் விரைவாக மீட்சிபெற்றோம்.

எங்களின் கஷ்டங்கள் அனைத்தும் விரைவில் தீர்ந்துவிடவில்லை. இதற்கு சிறிது காலம் எடுத்தாலும், தற்போது பொருளாதாரம் சாதகமாக இருப்பதற்குத் தேவையான சூழலை உருவாக்கியுள்ளோம்.

ஒருவர் மீது ஒருவர் விரல் நீட்டுவது நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழியாக அமையாது. இது ஒரு தற்காலிக நிலைமை. எதிர்காலத்தில், இழந்த நம்பிக்கைகள் அல்லது நன்மைகளை மீண்டும் பெறுவோம் என்று மேலும் தெரிவித்துள்ளார்.



# பணவீக்கம் தொடர்ந்து அதிகரிக்குமானால் அடிப்படை தேவைகள் கூட கேள்விக்குறியே!

## எச்சரிக்கை விடுத்துள்ளனர் பொருளாதார ஆய்வாளர்கள்

நாட்டில் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்தால் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத பாரதூரமான நிலை உருவாகும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

வற் வரி அதிகரிப்பால் ஏறக்குறைய 2.5 வீத பணவீக்க வீதத்தை நாம் எதிர்கொள்ள நேரிடும் என்று மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு கணித்துள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இலங்கையில் பணவீக்கம் உடனடியாக 6.4 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் வினவிய போது, பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரிக்கும். ஏற்கனவே எதிர்நோக்கும் நெருக்கடிகள் மேலும் உக்கிரமடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வரி அதிகரிப்பு, பணவீக்க அதிகரிப்பை நேரடியாகப் பாதித்துள்ள நிலையில், மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப் பணத்தை மக்களின் குறுகிய கால அல்லது நீண்ட கால நலனுக்காக திறம்பட பயன்படுத்துவதில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

வரிகளை உயர்த்துவதுடன் செலவுகளை நிர்வகிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கும் நிலைமை மற்றும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை கருத்தில் கொண்டு அரசு வரிகளை உயர்த்தியுள்ளதால், இந்த நேரத்தில் மக்களுக்கும் பொறுப்பு உள்ளது என்று கலாநிதி பிரியங்க துனுசிங்க சுட்டிக்காட்டினார்.

# மட்டக்களப்பு சிவில் அமைப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு!





**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட கோறளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவை மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பு நேற்று முன்தினம் வழங்கியது.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் சி.மாமாங்கராஜாவின் தலைமையில், வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட முறுக்கன் தீவு , பிரம்படித்தீவி, சாராவெளி, அம்பேஸ்குடா கிராம மக்களுக்கு 400 மதிய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் தேசபந்து மு.செல்வராஜாவின் அனுசரணையில் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் கா.சித்திரவேல், உதவிப் பிரதேச செயலாளர் சோ.யோகராஜா உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

உணவுப்பொதிகளுக்கு அனுசரணை வழங்கிய அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் தேசபந்து மு.செல்வராஜாவுக்கும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் இந்நிகழ்வில் கலந்து பங்காற்றிய மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்களுக்கும் பிரதேச மக்கள் தமது நன்றி தெரிவித்துள்ளனர்.





# வடக்கு கடற்தொழிலாளர்கள், எம்.பிமார் இந்தியாவுக்குச் சென்று பேச வேண்டும்

## அப்போதுதான் கடற்றொழிலாளர் பிரச்சினை தீரும் என்கிறார் டக்ளஸ்

( வாஸ் கூஞ்ஞ)

மீனவர்கள் பிரச்சனை தொடர்பாக இரு அரசுகளிடையே நடைபெற்றுள்ள பேச்சுகளில் முன்னேற்றம் இல்லை. இந்த நிலையில் வட மாகாண கடற் தொழிலாளர்கள் மற்றும் இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்று உண்மையைத் தெரிவிக்கும் போது இந்தப் பிரச்சனைகள் வெகு விரைவில் தீர வாய்ப்பு இருக்கின்றது.

இவ்வாறு கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சனிக்கிழமை (13) கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டபோது மன்னார் மாவட்ட செயலகத்தில் செயலமர்வு இடம்பெற்றது.

இதில் பலதரப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டம் முடிவுற்றதும் ஊடகவியலாளர்கள் மத்தியில் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

தற்பொழுது இந்தக் கூட்டத்தில் என்னிடம் பலதரப்பட்ட பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. இவைகளுக்கெல்லாம் தீர்வு எட்ட வேண்டிய அவசியம் உண்டு.

இவற்றையெலாம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முன்வைக்கும்படி கேட்டுள்ளேன்.

அதேநேரத்தில் கடற்தொழில் மற்றும் ஏனைய தொழில் விடயமாகவும் பிரச்சனைகள் இங்கு முன்வைக்கப்பட்டன. இவற்றையெல்லாம் எனக்கு எழுத்து மூலமாகவும் தரும்படியும் கேட்டுள்ளேன்.

2018 ஆம் ஆண்டுச் சட்டத்தில்



இந்திய மீனவர்கள் இங்கு வந்து தொழில் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அது சட்டவிரோத செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இரு அரசுகளுக்கும் இடையே பேச்சுகள் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன. இதில் எந்த வித முன்னேற்றமும் கிடைப்பதாக எமக்குத் தெரியவில்லை.

அத்துடன் இரண்டு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று வடக்கு மாகாண கடற்தொழிலாளர்கள் அங்குச் சென்று தமிழ்நாட்டு முதலமைச்சர் மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர் ஆகியேருடன் சந்தித்து உண்மை நிலமைகளை விளங்கப்படுத்துவது,

இரண்டாவது இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு குழுவாகச் சென்று மேற்கூறப்பட்டவர்களுடன் சந்தித்து அங்குள்ள மீனவர்களால் இங்குள்ள மீனவர்களின் பாதிப்புக்களை எடுத்துரைப்பது.

உண்மையாக இங்கு என்ன நடக்கின்றது என்றால், இந்திய மீனவர்கள் எல்லைத் தாண்டி அத்துமீறி மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்ற வேளையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர். இவர்கள் அங்கு கூறும் கதைகள் தாங்கள் சட்டபூர்வமான கடற்தொழிலைச் செய்கின்றோம்.

ஆனால் இலங்கை கடற்படையினர் தான் தங்களுக்கு துன்பதை தருகின்றார்கள் என்று.

இது உண்மையல்ல. ஆகவேதான் வட மாகாண கடற்தொழிலாளர்கள் மற்றும் இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்குச் சென்று தெரிவிக்கும்போது இந்தப் பிரச்சினைகள் வெகு விரைவில் தீர வாய்ப்பு உள்ளது.

புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கு காரணம் கடந்த கால சட்டங்கள் பல தொகுப்புகளாக இருக்கிறன. ஆவற்றை ஒரு தொகுப்பாக அமைக்கவும், அடுத்து எமது வளங்களை காப்பாற்றுவதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவுமே இப்புதிய சட்டம் கொண்டு வரப்படுகின்றது.

இது இன்னும் முழுமை அடையவில்லை. இன்னும் இது வரைபாகவே இருக்கின்றது. இது ஆங்கிலத்தில் முடிவுபெற்றுள்ளது. தற்பொழுது இது தமிழ் மற்றும் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது.

கடற்தொழில் சங்கங்களோடும் துறைசார்ந்தவர்களுடனும் கலந்துரையாடிய பின்பே இறுதி முடிவு எடுக்கப்படும். அதன் பின்பே இதை அமைச்சரவைக்கு சமர்பிக்க இருக்கின்றோம்.- என்றார்.



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2800 குடும்பங்களுக்கு

# சமைத்த உணவுப் பொதிகள் பொங்கல் தினத்தில் வழங்கல்!





(அபு அலா)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனை பிரதேச செயலத்துக்குட்பட்ட 2 ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு சமைத்த உணவுப் பொதிகள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளச்சேனை அமைப்பாளரும், தொழிலதிபருமான ஏ.கே.அமீர் தலைமையில் பொங்கல் தினமான இன்று (15) வழங்கப்பட்டன.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உயர்பீட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்டு பலர் கலந்து கொண்டனர்.

# சிட்னியில் பழங்குடி அபரோஜின மக்களுடன் பொங்கல் விழா!





தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழா ஆஸ்திரேலிய பழங்குடி அபரோஜின மக்களுடன் இணைந்து சிறப்புற சிட்னியில் நடைபெற்றது.

நியூ சவுத்வேல்ஸ் மாநில தமிழ் மக்கள் சார்பாக, அனைத்து தமிழ் வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், பன்னாட்டு தமிழ் மக்களின் ஆதரவோடு "பொங்கல் திருவிழா" நிகழ்வு இன்று holroyd Gardens, Merrylands எனும் பூந்தோட்டத்தில் நேற்று (14) மாலை நடைபெற்றது.

இந்தப் பொங்கல் நிகழ்வானது, உலகெங்கும் பரவி வாழும் புலம்பெயர்த் தமிழர்கள் தமிழ் மொழியால், தமிழ் இன உணர்வால், தமிழ்ப் பண்பாட்டால் தன்னார்வமாக ஒன்றுகூடும் நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

இன்றைய கூட்டுப் பொங்கல் நிகழ்வில் கோலப் போட்டி, வீட்டு விலங்குகள் காட்சிப்படுத்தல் மற்றும் சிறுவர் பொழுதுபோக்கு நிகழ்வு, தமிழ்க் கலை நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு என்பன இடம்பெற்றன.

அத்துடன் தமிழர் விளையாட்டுகள், பழம் பொறுக்குதல், இசை நாற்காலி, தடை ஓட்டம், உரி அடித்தல் (முட்டி உடைத்தல்), சாக்கு ஓட்டம், தேசிக்காய் ஓட்டம் , கிளித்தட்டு, கயிறு இழுத்தல், கபடி போன்றவை, சிறிய அளவிலான மத்தாப்புக் காட்சி போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் இளையோர்கள் மற்றும் பெரியவர்கள் பங்கு கொண்ட பொங்கல் நடனங்கள் உட்பட விசேட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அத்துடன் இந்நிகழ்ச்சியில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் 2023 இல், தமிழ் மொழியில் சித்தியடைந்த உயர்தர மாணவர்களுக்கான கௌரவிப்பும் நடைபெற்றது.

# நகையைக் கொள்ளையடித்த நபர் மடக்கிப் பிடித்து அடித்துக் கொலை!

பாணந்துறை பிரதேசத்தில் பெண்ணொருவரின் கழுத்தில் இருந்த தங்க நகையைக் கொள்ளையடித்த நபர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது,

பெண் ஒருவரது கழுத்தில் தங்க நகையை நபர் ஒருவர் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

அந்த நபரை மடக்கிப் பிடித்து சிலர் தாக்கியுள்ளனர்.

தாக்கப்பட்ட நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பாணந்துறை பிங்வல பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என்று பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனை பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். றோட்டறிக் கழகத்தின் பொங்கல்!








யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகத்தின் தைப்பொங்கல் நிகழ்வு கடந்த நேற்று முன்தினம் (13) தெரிவுத் தலைவர் றோட்டேரியன் நித்திலா தலைமையில் பண்ணை சுற்றுவட்டாரத்தில் அல்லங்காடி கொண்டாட்டத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் றோட்டறி கழக உறுப்பினர்கள், றோட்டரக்ட் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# திருக்கோவில் ஆஸ்பத்திரியை பார்வையிட்ட சுகாதாரப் பணிப்பாளர்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையும் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து பிராந்திய பணிப்பாளர் மற்றும் பிரிவுத் தலைவர்கள் அங்கு சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தனர். அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளரையும் தொடர்பு கொண்டு கலந்துரையாடினர்.

நோயாளர்களின் நலன்கருதி முன்னாயத்த நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப்பட்டன.

டெங்கு மற்றும் ஏனைய தொற்று நோய்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் சிகிச்சையளிப்பதில் மாற்று வழிகளை பின்பற்றுமாறும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் பணிப்புரை விடுத்தார்.

உயிரியல் மருத்துவப் பொறியியலாளரையும் அங்கு அழைத்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

# வாடி வீட்டுத் தொகுதியில் இடம்பெற்ற அம்பாறை மாவட்ட பொங்கல் விழா!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வருடந்தோறும் இடம்பெற்று வரும் பொங்கல் விழா இவ்வருடமும் அம்பாறை வாடி வீட்டுத் தொகுதியில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கவல்நெத்மினி, பிரதேச செயலாளர்கள், மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீஸன், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்தஸ்ரீ, அம்பாறை உதவி பிரதேச செயலாளர் சமாதி அகலகொடுவ உட்பட மாவட்ட செயலக உத்தியோஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# உத்தேச மீனவர் சட்டமூலம் தொடர்பில் விழிப்புணர்வு



(அப்துல்சலாம் யாசீம் )

புதிதாக கொண்டு வரப்படவுள்ள உத்தேச மீனவர் சட்டமூலம் தொடர்பிலான தெளிவூட்டல் பிரச்சாரம் நேற்றுத் (13) திருகோணமலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட செயலாளர் கிருஷ்ணபிள்ளை ஸ்ரீ பிரசாத் தலைமையில் பிரச்சார நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

பத்தாம் குறிச்சி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டு திருக்கடலூர், வீரநகர், பள்ளத்தோட்டம், ஜமாலியா ஆகிய மீனவ கிராம மக்களின் வீடுகளுக்கு சென்று மக்களுக்குத் தெளிவூட்டல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட செயற்பாட்டாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# திராய்க்கேணி கிராம மக்களுக்கு ஜேர்மன் சகோதரிகளால் உணவு!





( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் உள்ள திராய்க்கேணி தமிழ் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் அங்குள் மக்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் ஜேர்மனியை சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான லிங்கத்தின் புத்திரிகளான ஆத்மிகா, துவாரகா ஆகியோரின் அனுசரணையில் நேற்றுச் சமைத்த உணவு வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகள் செய்த காரைதீவு முன்னாள் தவிசாளரும் பிரபல சமூக சேவையாளருமான கி.ஜெயசிறில் அங்கு சென்று மக்களுக்குச் சமைத்த உணவை வழங்கினார்.

அங்குள்ள பெரும்பாலான வீடுகள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளன. வீதிகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

# சபரிமலையில் இன்று மகரஜோதி தரிசனம்: லட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் குவிந்தனர்



சபரிமலையில் மண்டல பூஜைக்காக கடந்த நவம்பர் 16 ஆம் திகதி நடை திறக்கப்பட்டது. மண்டல பூஜை வழிபாடு டிசம்பர் 27 ஆம் திகதி நடைபெற்றது. அன்று இரவு நடைசாத்தப்பட்டது.

மகரவிளக்கு பூஜைக்காக டிசம்பர் 30 ஆம் திகதி மீண்டும் நடைதிறக்கப்பட்டது. தொடர்ந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

தை மாதம் முதல் திகதியான இன்று நடைபெறும் மகரஜோதியையொட்டி, ஜோதி வடிவில் ஐயப்ப சுவாமி பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார்.

மகரஜோதியைக் காண கேரளா மற்றும் தமிழ்நாடு, கர்நாடகா,ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பக்தர்கள் குவிந்துள்ளனர்.

இன்று அதிகாலை 2.46 மணிக்கு மகரசங்ரம பூஜையுடன் தொடங்கி, நெய் அபிஷேகம் மற்றும் வழக்கமான பூஜைகள் நடைபெறும்.

பகல் 12.30 மணிக்கு நடைபெறும் சிறப்பு பூஜையைத் தொடர்ந்து, பகல் 1 மணிக்கு கோயில் நடை சாத்தப்படும். மாலை 5 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு, மாலையில் ஐயப்ப சுவாமி பந்தள மன்னர் வழங்கிய திருவாபரண அலங்காரத்தில் காட்சியளிப்பார். மாலை 6.30 மணியளவில் சபரிமலை பொன்னம்பல மேட்டில் ஐயப்ப சுவாமி ஜோதி வடிவில் பக்தர்களுக்கு காட்சியளிப்பார்.

மகரஜோதியைக் காண பக்தர்களின் வசதிக்காக சன்னிதானத்தின் திருமுற்றம், பாண்டித்தாவளம், கொப்பரைக்களம், மாளிகைபுரம், அப்பாச்சிமேடு, அன்னதான மண்டபம் உள்ளிட்ட 10 இடங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 4 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் மகரஜோதியை தரிசிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி, சபரிமலையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து 20 ஆம் திகதி வரை பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவர். 21 ஆம் திகதி பந்தள ராஜ குடும்பத்தினரின் சுவாமி தரிசனத்துக்குப் பிறகு மண்டல பூஜை வழிபாடு முடிந்து, கோயில் நடை சாத்தப்படும்.

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடைபெறும் ஜல்லிக்கட்டால் விழாக்கோலம் பூண்ட மதுரை



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று முதல் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் தொடர்ந்து 3 நாள்கள் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. இதற்காக திரண்டுள்ள வெளிநாட்டு, உள்நாட்டுப் பார்வையாளர்களால் மதுரை மாவட்டம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வாடிவாசல்களில் மொத்தம் 6 ஆயிரம் காளைகளை அவிழ்த்துவிட மாவட்ட நிர்வாகத்தால் டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசு சார்பில் அவனியாபுரத்தில் இன்று ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெறுகிறது.

நாளை பாலமேடு, நாளை மறுநாள் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடைபெறுகிறது. இந்த 3 போட்டிகளுக்கும் சேர்த்து 12,176 காளைகளும், 4,514 வீரர்களும் ஆன்லைனில் முன்பதிவு செய்தனர். இந்தக் காளைகளை கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்து, தகுதிச் சான்று வழங்கினர்.

அந்த சான்றுகளுடன்தான் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்திருந்தனர். அவற்றை ஆய்வு செய்த அதிகாரிகள், அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுகளில் பங்கேற்க மொத்தம் 6 ஆயிரம் காளைகளுக்கு டோக்கன்கள் வழங்கியுள்ளனர்.

அதன்படி, இன்று நடைபெறும் அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 1,000 காளைகளும், 600 மாடுபிடி வீரர்களும் களமிறங்குகின்றனர். இதையொட்டி, மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் 1,500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அலங்காநல்லூர், பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு 2 ஆயிரத்து 500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

சி.சி.டி.வி. கண்காணிப்பு, நோயாளர் காவுவண்டிகள், தற்காலிக அவசர சிகிச்சை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், நடமாடும்கழிப்பறை மற்றும் தற்காலிக கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று போட்டிகளிலும் சிறந்த காளை, சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஆகியோர் சார்பில் தலா ஒரு கார் என்ற அடிப்படையில் மொத்தம் 6 கார்கள் பரிசாக வழங்கப்பட உள்ளன.

# ஹமாஸ் அமைப்பின் தளபதிகள் லெபனானிலிருந்து தப்பியோட்டம்

பெய்ரூட்டை தளமாகக் கொண்ட ஹமாஸ் அமைப்பின் இராணுவத் தலைவர்களில் பெரும்பாலானோர் படுகொலைகளுக்கு இலக்காகலாம் என்ற அச்சம் காரணமாக லெபனான் தலைநகரில் இருந்து தப்பியோடிவிட்டனர் என ஹமாஸின் ஆதாரத்தை மேற்கோள்காட்டி சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காஸாவை தளமாகக் கொண்டஹமாஸ் அமைப்பின் ஆதாரத்தின்படி, சலேஹ் அல்-அரூரி கொலையைத் தொடர்ந்து ஹமாஸ் தங்கள் தலைவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதியில் இஸ்ரேலிய ஆளில்லா விமானம் நடத்தியதாக கூறப்படும் தாக்குதலில் குறைந்தது ஐந்து பேருடன் அரூரி கொல்லப்பட்டார்.



அரூரி தெற்கு இஸ்ரேலில் ஹமாஸின் ஒக்டோபர் 7 படுகொலையின் முதன்மைத் திட்டமிடுபவர்களில் ஒருவராக மட்டும் பார்க்கப்படவில்லை.

ஹமாஸ் அதிகாரிகள் லெபனானை விட்டு சிரியா மற்றும் துருக்கிக்கு நாடு கடத்தப்பட்டனர். கூடுதலாக, மூத்த தலைவர் காசி ஹமாத் கட்டாருக்கு தப்பிச் சென்றுள்ளார் எனவும் , அரூரியின் படுகொலைக்குப் பிறகு லெபனானுக்குத் திரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

# ஹமாஸ் அமைப்பின் துணைத்தளபதியின் சகோதரிகளை கைது செய்தது இஸ்ரேல்!





லெபனானில் ஆளில்லா விமான தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் அமைப்பின் துணைத் தளபதி சலே அல்-அரூரியின் சகோதரிகளான தலால் மற்றும் பாத்திமா அல்-அரூரி இருவரும் இஸ்ரேல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனவரி 2 ஆம் திகதி பெய்ரூட்டில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இரவு இஸ்ரேலிய படைகள் ரமல்லா மாவட்டத்தில் உள்ள அல்-பிரே மற்றும் அரூரா நகரங்களில் உள்ள அவர்களது வீடுகளுக்குள் நுழைந்து இரண்டு பெண்களையும் கைது செய்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

தலால் மற்றும் பாத்திமா அல்-அரூரி ஆகியோர் "வன்முறையை தூண்டுகின்றனர் என சந்தேகிக்கப்படுகிறார்கள்" என்று இஸ்ரேலிய இராணுவ வானொலியை மேற்கோள் காட்டி ஜெருசலேம் போஸ்ட் தெரிவித்துள்ளது.

துணைத் தளபதியின் படுகொலையைத் தொடர்ந்து இரண்டு சகோதரிகளையும் அல்-ஜசீரா பேட்டி கண்டது. அவர்கள் இருவரும் தங்கள் சகோதரரைப் பற்றி பெருமித உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் வெடித்துச் சிதறும் எரிமலை!

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவில் உள்ள மராபி மலையில் இரண்டாவது முறையாக எரிமலை வெடித்துள்ளது.

இந்த எரிமலை நேற்று அதிகாலை 6.21 மணிக்கு வெடித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழைக்காலத்தில் ஏற்படக்கூடிய எரிமலைக்குழம்புகளின் அச்சுறுத்தல் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என எரிமலை ஆய்வு நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எரிமலையில் இருந்து தீக்குழம்பு வெளியேறியதால் அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதனால் அங்குள்ள 150 இற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

